## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி
## அ.வ.எண். 43/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மனோகரன் | மதம் | : |
| த/பெ | : புலிபாடு ஆர்வேல் நாயுடு | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

**30.08.2024**

வா.சா.2 திரும்ப அழைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. 1 முதல் 3 பிரதிவாதிகள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் உள்ள சொத்துக்கள் புலிபாடு ஜெயராமனின் பூர்வீக சொத்துக்கள் என்றால் இல்லை. கமலம்மாள் சொத்துக்கள் ஆகும். கமலம்மாள் சொத்துக்கள் என்று இவ்வழக்கு பிராதில் சொல்லியுள்ளோமா என்றால் ஞாபகமில்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் எனது பிராதில் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தின் புல எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை.

2. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் 85 செண்ட் ஆகும். அதில் எனக்கு ராமசந்திரனுக்கும் 12 1/2 செண்ட் பாத்தியம் ஆகும். தாவா சொத்தின் நான்கு எல்லைகள் சொல்ல முடியுமா என்றால் தெற்கே கமலம்மாள், வடக்கே நான் மற்றும் ராமசந்திரன், கிழக்கே ஆர்வேல் நாயுடு, மேற்கே கமலம்மாள் ஆகும். நான் எப்போது சொத்து வாங்கினேன் என்றால் 2006 ஆகும். தேதி மாதம் ஞாபகமில்லை. நான் யாரிடம் இருந்து சொத்து வாங்கினேன் என்றால் கமலம்மாள், துரைசாமி நாயுடுவிடம் வாங்கினேன்.

3. நான் சொத்து வாங்கும்போது யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் சொத்து கமலம்மாள் உடையது. பட்டா துரைசாமி பெயரில் இருந்தது. சொத்து கமலம்மாள் பெயரில் இருந்தது என்ற விவரத்தை நான் என் வழக்கில் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. நான் 2006ல் வாங்கியதாக

சொல்லும் ஆவணத்தில் யார் யார் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் கமலம்மாள் மகள் அனந்தா, பாலன், ஜெகதீசன், கமலம்மாள், துரைசாமி நாயுடு ஆகியோர் கையெழுத்து போட்டார்கள்.

4. அனந்தா, பாலன், ஜெகதீசன் யார் என்றால் கமலம்மாளின் பிள்ளைகள் ஆவார்கள். உயில் மூலம் கமலம்மாளுக்கு வந்ததாகவும் பட்டா துரைசாமி பெயரில் இருந்ததாக சொல்லியிருப்பதில் அனந்தா, பாலன், ஜெகதீசன் ஆகியோரிடம் ஏன் கையெழுத்து வாங்கினேன் என்றால் கமலம்மாளின் பிள்ளைகள் என்பதால் வாங்கினேன். கமலம்மாள் துரைசாமி நாயுடுக்கு அனந்தா, பாலன், ஜெகதீசன் மட்டும்தான் வாரிசா என்றால் ஜெயராமன் என்ற மகன் உள்ளார்.

5. நான் வாங்கிய ஆவணத்தில் ஜெயராமன் கையெழுத்து போட்டுள்ளாரா என்றால் அவர் கையெழுத்து போடவில்லை, போய்விட்டார். வழக்கு சொத்துக்கள் பிரிக்கப்படாத கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றாலும் அதில் 1ம் பிரதிவாதி ஜெயராமனுக்கு பங்கு உள்ளது என்றாலும் அவரை கட்டுப்படுத்தாமல் அவர் கையெழுத்து இல்லாமல் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணம் செல்லாது என்றாலும் சரியல்ல. நான் வாங்கிய பிறகு என் பெயரில் பட்டா மாற்றினோமா என்றால் மாற்றினோம். எப்போது நாங்கள் பட்டா மாற்றினோம் என்றால் ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 8 பட்டாதான் நான் சொல்லும் பட்டாவா என்றால் எனக்கு பார்வை சரியாக தெரியாததால் பட்டாவை பார்த்து சொல்ல இயலவில்லை.

6. வா.சா.ஆ 8 பட்டா 2013 ல் வழங்கப்பட்டது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த 2021ம் ஆண்டிற்கான பட்டா எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. எங்கள் பெயரில் பட்டா இல்லாதது தெரிந்தே நிரந்தர உறுத்து பரிகாரம் மட்டும்கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். என் பெயரில் எந்த வருவாய் ஆவணங்கள் இல்லாத பட்சத்தில் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 ஆவணம் 1ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

7. தற்போது வழக்கு சொத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்பது தெரியுமா என்றால் தெரியாது. தற்போது பட்டா ஜெயராமன் பெயரில்தான் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. துரைசாமி நாயுடு ஜெயராமனுக்கு எந்த வருடம் உயில் எழுதி வைத்தார் என்றால் எனக்கு தெரியாது. துரைசாமி நாயுடு ஜெயராமனுக்கு 2007 ல் உயில் எழுதி வைத்தார் என்றாலும் அதனால் பட்டாவை ரத்து செய்ய வேண்டும் என்றும் கோரி நாங்கள் மனு கொடுத்தோம் என்றால் என் அண்ணனுக்கு தான் தெரியும். அந்த பட்டா மாறுதல் மனு என்ன ஆனது என்றால் எனக்கு தெரியாது.

8. எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் நாங்கள் வாங்கிய நிலத்தை ஜெயராமன் பிரச்சனை செய்கிறார் என்று வழக்கு தாக்கல் செய்தோம். நாங்கள் கொடுத்த பட்டா மாறுதல் மனுவின் பெயரில் ஜெயராமன் பெயரில் ஜெயராமனுக்கு கொடுத்த பட்டா ரத்து செய்யப்பட்டது என்றால் அது என் அண்ணனுக்கு தான் தெரியும். அதன் பெயரில் ஜெயராமன் மேல்முறையீடு தாக்கல் செய்தார் என்றால் தெரியாது. ஜெயராமன் தாக்கல் செய்த மேல்முறையீட்டில் எங்களுக்கு வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டு ஜெயராமனுக்கு பட்டா வழங்க உத்தரவிடப்பட்டது என்றால் தெரியாது.

9. மேற்படி உத்தரவின் பெயரில் நாங்கள் தாக்கல் செய்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் தெரியாது. எனக்கு எல்லா விவரமும் தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 2007 லேயே ஜெயராமனுக்கு எழுதிவைக்கப்பட்ட உயில் விவரம் எனக்கு தெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 2007 லேயே ஜெயராமனுக்கு எழுதிவைக்கப்பட்ட உயில் விவரம் எனக்கு தெரியும் என்ற நிலையில் 2010 க்குள் நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் ஆனால் 11 ஆண்டுகள் கழித்து காலதாமதமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு காலவறையறைச் சட்டத்தின்படி தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் நாங்கள் வாங்கியதில் இருந்து அவர் எந்த

ஆட்சேபணையும் செய்யவில்லை. நாங்கள் தான் அனுபவித்து வந்தோம். அவர் ஆட்சேபணை செய்த உடன் இந்த வழக்கை தாக்கல் செய்தோம்.

10. நாங்கள் தான் தாவா சொத்தை அனுபவித்தோம் என்று கூறுவதற்கு ஆதரவாக ஏதேனும் ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சாலைக்காக நில ஆர்ஜீதம் செய்ததற்கான இழப்பீடு தொகையையும் என் அண்ணன்தான் பெற்றுள்ளார். என் அண்ணனுக்கு இழப்பீடு கொடுக்க கூடாது என்றும் இழப்பீடு கொடுத்தது தவறு என்றும் சென்னை உயர் நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதி நீதிப்பேராணை மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது. என் அப்பா பெயர் ஆர்வேல் நாயுடு. என் அண்ணன் தன் அப்பா பெயரை ராமசந்திரன் த/பெ புலிபாடு ஜெயராம நாயுடு என பொய்யாக சொல்லித்தான் இழப்பீடு பெற்றுள்ளோம் என்றால் அப்படியில்லை.

11. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் பக்கம் 3 பத்தி 9ல் "**துரைசாமி நாயுடு எழுதிவைத்த உயில் செல்லத்ததக்கது அல்ல அதனால் அந்த ஆவணத்தை நாங்கள் ரத்து செய்ய வேண்டி பரிகாரம் கோர வேண்டியதில்லை**" என்று சொல்லியிருக்கிறேன் என்றால் ஞாபகமில்லை. உயில் பற்றி கேள்வி கேட்க எனக்கு எந்த உரிமையில்லை என்றாலும் துரைசாமி கமலம்மாளின் மற்ற வாரிசுகளுக்குதான் உயிலை பற்றி கேள்வி கேட்க உரிமையுள்ளது என்றாலும் கமலம்மாள் பெயரில் உயிலும் துரைசாமி பெயரில் பட்டா இருந்ததால்தான் நாங்கள் வாங்கினோம்.

12. உயில்படி வழக்கு சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியம் என்றாலும் தற்போதும் 1ம் பிரதிவாதிதான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றாலும் தவறு. வழக்கு சொத்தை நாங்கள் எந்த காலத்திலும் அனுபவித்ததே இல்லை என்றால் சரியல்ல. சொத்தை நாங்கள்தான் அனுபவித்து வருகிறோம். நான் சொல்வது பொய் என்றாலும் வழக்கு சொத்து எங்கள் அனுபவத்தில் இல்லை என்றாலும் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)